Reg. M. 2330 "SIDDHANTHAM" Vol. 17. No. 6

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு

| மலர் 17 | தாரண ௵ ஆனி ௴ 1944 ௵ ஜூன் ௴ | இதழ் 6 |
|---|---|---|

பத்திராசிரியர் :

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

51, தென்கூர் செல்வ விநாயகர் கோயில் தெரு,

மயிலாப்பூர், சென்னை

ஆண்டுச் சந்தா ரூபா 2 தனிப்பிரதி அணா 3

## திருவிளையாடற் புராணம்

[நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்]

திருவிளையாடற் புராணம் என்பது மதுரையம்பதியிற் கோயில் கொண்டிருக்கும் பரங்கருணைத் தடங்கடலாகிய சோம சுந்தரக் கடவுளால் அடியார்கள் பொருட்டு நிகழ்த்தி யருளிய அற்புதமான விளையாடல்களை யுணர்த்தும் தமிழ் நூலாகும். மதுரைப் பதியானது செந்தமிழ்ப் பாண்டி நாட்டிலே படைப்புக்காலந்
...ப்பட்டுவரும் பழங் குடியினராகிய பாண்டி வேந்தர்
...சு வீற்றிருக்கும் தலைநகராயது; பன்னெடுந்
...தமிழாராயப் பெற்ற தகுதிப்பாடுடையது;
பாண்டிநாட்டுப் பதினான்கு திருப்பதிகளுள்
... ஆலவாய் முதலிய திருப்பெயர்களையுடை

யது. அதன்கண் உறையும் இறைவனுடைய அருட்செயல்கள் திருவிளையாடல் எனப்படுவன. வரம்பிலா ஆற்றலுடைய இறைவன் செய்யுஞ் செயலெல்லாம் வருத்தமின்றி இனிதின் முடிதலின் அவற்றை அவன் விளையாட்டுக்கள் என்பர். "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" என்னும் திருவாசகமும், "சொன்னவித் தொழில்கள் என்ன காரணந் தோற்ற வென்னின், முன்னவன் விளையாட்டென்று மொழிதலு மாகும்" என்னும் சிவஞானசித்தியும் நோக்குக. ஏனோரும் இங்ஙனம் விளையாட்டென்று கூறுவரென்பது "அலகிலா விளையாட் டுடையார்" என்னும் கம்பநாடர் கூற்றானறிக.

சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களை உணர்த்தும் நூல்கள் பல. அவற்றுள், திருவிளையாடல்கள் பலவற்றையும் விரித்துரைப்பனவாய், திருவிளையாடற் புராணம் என்னும் பெயருடன் திகழ்வன இரண்டு. அவற்றுள் முன்னது செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவரால் இயற்றப் பெற்றது; திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் எனப்படுவது; வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும், பழைய திருவிளையாடல் எனவும் வழங்கப் பெறுவது. பின்னது திருமறைக்காட்டிலே அபிடேகத்தர் மரபிலே தோன்றிய பரஞ்சோதி முனிவரால் இயற்றப் பெற்றது. முன்னதிலும் ஏறக்குறைய இருமடங்கு விரிவுடையது; கற்பனை யலங்காரங்களில் சிறந்தது; சொன்னயம் பொருணயம் மிக்கது; சைவ நன்மக்கள் யாவரானும் பெரிய புராணத்தை யடுத்துப் பாராட்டிப் பயிலப் பெறுவது. "பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடியகவிவலவ" எனவும், "தெய்வ மணக்குஞ் செய்யு ளெலாம்" எனவும் சேக்கிழார் பெருமானையும் பெரிய புராணத்தையும் குறித்து மகா வித்துவான்-மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் கூறியன இந்நூலாசிரியர்க்கும் இந்நூலுக்கும் ஏற்புடையனவே. தான் தோன்றிய பின், பழைய புராணத்தை மூலையில் ஒடுங்கிக் கிடக்கச்செய்து, திருவிளையாடற் புராணம் என்ற வளவில் தன்னையே நினைவுகூரச் செய்து உலகெங்கும் உலாவி வருதலொன்றே இதனது பெருமைக்குச் சான்றாகும். சமய நோக்கம் முதலியனவின்றியே இலக்கியவளம் கருதித் தமிழ் மக்கள் யாவரும் விரும்பிப் படிக்கின்ற நூல்கள் நைடதம், திருவிளையாடற் புராணம், வில்லி பாரதம், கம்பராமாயணம் முதலியவாமென்பது பலரும் அறிந்தது. எனவே, பழைய வரலாறுகளின் வாயிலாக மறைகளின் பொருளை வெளிப்படுத்தலி[illegible]ம் எனப்படும். இந்நூல் பெருங்காப்பிய இலக்கண[illegible]ா யிருத்

தலின் காப்பியம் என்னும் பெயருக்கு முற்றும் ஏற்புடையதே யாகும். தன்னிகரில்லாத தலைவனையுடையதாய், மலை கடல் நாடு வளநகர் பருவம் இருசுடர்த் தோற்றம் என்ற இனையன புனைந்துரைப்பதாய், நன் மணம் புணர்தல், பொன்முடி கவித்தல், பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், தேம்பிழி மதுக்களி சிறுவர்ப் பெறுதல் என்றிவை முதலியவற்றையும் மந்திரம் தூது மேற்செலவு போர்வென்றி முதலியவற்றையும் இனிதியம்புவதாய், உறுதிப் பொருள் நான்கும் பயப்பதாய், சுவையும் பாவமும் தோன்றச் செய்து விளங்குவது பெருங்காப்பியம் என்ப. இந்நூலகத்து ஆண்டாண்டு இவ்வியல்புகள் அமைந்திருத்தல் கண்கூடு. மற்றும் இந்நூலாசிரியர் இதனை ஓர் காப்பியமாகக் கருதியுள்ளாரென்பது,

> தன்னிக ருயர்ச்சி யில்லான் காப்பியத் தலைவனாக
> முன்னவர் மொழிந்த தேனோர் தமக்கெலா முகம னன்றோ
> அன்னது தனதே யாகும் அண்ணலே பாண்டி வேந்தாய்
> இந்நகர்க் கரசனாவான் இக்கவிக் கிறைவ னாவான்.

எனக் கூறுவதனால் விளங்கும். இவ்வாறு புராணமும் காப்பியமுமாகவுள்ள இந்நூல் சைவர்களுக்கு ஒரு சமய நூலும் பத்தி நூலுமாகத் திகழ்கின்றது. இந்நூலாசிரியர் சங்கச் செய்யுட்களிலும், சீவக சிந்தாமணி முதலிய பெருங் காப்பியங்களிலும், பன்னிரு திருமுறைகளிலும், சைவ சித்தாந்த மெய்ந்நூல்களிலும் அழுந்திய பயிற்சியும் புலமையும் உடையார்; பெருமிதமுடைய இனிய நடையுடன் கவிதையியற்றுந் திறன் இயல்பிலே கைவரப் பெற்றவர். இவர் பழைய தமிழ் நூற்கருத்துக்கள் பலவற்றை இந்நூலில் ஆண்டாண்டு எடுத்தமைத்திருத்தலை இதற்கு யான் எழுதிய உரையில் எனது சிற்றறிவிற்கு எட்டியவாறு புலப்படுத்தியுள்ளேன். எடுத்துக் காட்டாகப் பின்வருவன சில காண்க.

"வையைதன், நீர்முற்றி மதில்பொருஉம் பகையல்லால் நேராதார்,
போர்முற் றொன்றறியாத புரிசைசூழ் புனலூரன்"

என்னும் மருதக்கலியின் கருத்து.

> "அம்மதில், திரைக்கரந் துழாவி,
> அகழவோங்குநீர் வையையா லல்லாது வேற்றுப்
> பகைவர் சேனையாற் பொரப்படும் பாலதோ வன்றே"

என இந்நூலின் மதிற்சிறப் புணர்த்துஞ் செய்யுளில் அமைக்கப் பெற்றுளது.

மலை, பழனி ஆச்சாரி, நா. இ. மகாலிங்கம், பார்வதி அம்மாள் ஆகிய அன்பர்கள் பேசினார்கள். தினமும் ஒருவர் தலைமை வகித்தார். அப்பணி செய்தவர்கள் திருவாளர்கள் சிவகுருநாத பிள்ளை, C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார், காஞ்சி வஜ்ரவேலு முதலியார், மாயவரம் கல்யாணம் பிள்ளை, K. A. சிவஞானம் பிள்ளை, D. ஆறுமுகம் பிள்ளை, சிவகாமி அம்மையார் ஆவர்.

திருவாவடுதுறை ஆதீனத்து மஹா சந்நிதானம் இவ்வகுப்பிற்கு நன்கொடையாக ரூபாய் 300 மூன்றூறு உதவியும் அவர்கள் பிரதிநிதியாக அருட்திரு சங்கரலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்களையும், கண்காணிப்பாளர் திரு. இராமலிங்க பிள்ளை அவர்களையும் அனுப்பியிருந்தார்கள். பணஉதவி செய்தவர்களின் விபரமும் வரவு செலவு கணக்கும் அடுத்த இதழில் வரும்.

பாபநாசம் கோயில் எக்ஸிகூடிவ் ஆபீசர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். ஆனந்த விலாசத்தில் வகுப்பு நடந்தது.

குற்றாலம், பாபநாசம், பம்பை, மானூர், சங்கரன் கோயில், கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி, அம்பா சமுத்திரம் முதலிய இடங்களிலிருந்து கோயில் தர்மகர்த்தர்கள் ஒவ்வொருவரும், பட்டர் ஒருவரையும், ஓதுவார்மூர்த்தி ஒருவரையும் வகுப்புக்கு அனுப்பிவைத்தார்கள்.

25-5-44ல் அதாவது கடைசி தினத்தன்று வகுப்புக்கு ஒழுங்காக வந்த 36 பேர்களுக்குத் திரு. C.M. இராமச்சந்திரஞ் செட்டியார் உறுதிப் பத்திரம் வழங்கினார். அன்று கோயில் வழிபாட்டுடன் வகுப்பு சிறப்பாக முடிந்தது.

2. நமது சமாஜத்தின் ஜூன் மாதக் கூட்டம் மரக்காணத்தில் திரு. துடிசைகிழார் சிதம்பரனார் அவர்கள் தலைமையில் 1-6-44 மாலை 6 மணி முதல் பத்து மணி வரையில் நடந்தது. திருவாளர்கள் பழநிசாமி சிவாசாரியர், பு. ர. சுவாமிநாதனார் அவர்கள் முறையே திருத்தொண்டருடைய அன்பு நிலையும் சேக்கிழாரும், இளங்கோவும் செகப்பிரியரும் என்பனபற்றிப் பேசினார்கள். அடுத்த நாட்காலையிலும் மாலையிலும் மரக்காணம் தமிழ் நன்னெறிக் கழகங்களின் ஆண்டு விழா நடந்தது. திரு. மயிலைகிழார் இளமுருகனார் இரண்டறக் கலத்தல் என்பதுபற்றியும், திரு. இளவழகனாரவர்கள் ஞான வாழ்க்கையும் சைவசித்தாந்த சாத்திரங்

"வஞ்சவினைக் கொள்கலனு முடலைத் தீவாய்
மடுக்கிலேன் வரையுருண்டு மாய்ப்பே னல்லேன்"

"மழலைதேனுச் சிறியனு மொருமதலை கையிற்கொண்ட
செம்பொன் மணிவள்ளம் போற்றேவர் யார்க்கும்
அறிவரியாய் சிறியேனை யெளிவந்தாண்ட அருமை யறியேன்"

என்பனவாதியாக வாதவூரடிகள் பரவுங்கூற்றில் வைத்து இவ்வாசிரியர் பாடியிருப்பன அறிந்து மகிழ்தற்குரியன.

இனி, தருமிக்குப் பொற்கிழி யளித்த படலத்தில், இளவேனிலின் இடல்வையும், பொழில் விளையாட்டு முதலியவற்றையும் நகைச்சுவை முதலியன தோன்ற விரித்துரைத்திருப்பன இவ்வாசிரியரது கற்பனைத் திறத்தை நன்கு விளக்குவனவாகவுள்ளன.

"மனிதர் வெங்கோடை தீர்க்கும் வசந்தமென் காலும் வேறு
தனிதவி ரிளங்கால் வேண்டும் சோலையுஞ் சோலை வேண்டும்
புனிதநீர்த் தடமும்வேறு புதுமல ரோடை வேண்டும்
மனிதரு மதியும் வேறு பான்மதி வேண்டும் காலம்"

என்னும் இளவேனில் வருணனையும்,

"சாடியுள் நறவ முண்டாள் தன்னுரு வேறுபாட்டை
ஆடியுள் நோக்கி நாணே வல்லனே எனைத்தான் கைக்கொண்
டோடினர் பிறருமுண்டோ வுயிரன்னான் வந்திங் கென்னைத்
தேடினன் செய்கேன் என்னைத் தேடித்தா சேடி யென்றாள்"

என்னும் உண்டாட்டுப் புனைவும் கற்பாரை இன்புறுத்துந் தகையினவாதல் காண்க.

இவ்வாசிரியர் சிவ சிந்தனை மேலிட்டவராய்த் தெய்வ மணங் கமழ இந்நூலை யாத்துளா ரென்பது, மேகம் தெய்வ நாயகன் நீறணி மேனிபோற் சென்று கடல் நீரைப் பருகி, உமையம்மை மேனிபோற் பசந்து, இறைவன் உயிர்களின் துன்பத்தைப் போக்குதற்கு அருள் சுரத்தல்போல், நீரினைச் சுரந்து எழுந்து என்றும் அது, பொதியின் மலையின் உச்சியில் மழையைப் பொழிவது இராமபிரான் சோமசுந்தரக் கடவுளின் திருமுடிமேல் தூய நீரால் திருமஞ்சன மாட்டுதல் போலும் என்றும், நெற் பயிர்கள், 'அன்புறு பக்தி விதை ஆர்வநீர் பாய்ச்சுங் கொண்டருக்கு இன்புறவானவீசன் இன்னருள் விளையுமா போல்' விளைந்தன என்றும் உலகியற் பொருள்களைக் கூறுமிடத்தும் இங்ஙனம் உவமை கூறிச் செல்லு

தலால் அறியப்படும். மற்றும் அவர், நீர்ப் பெருக்கின் கலக்கத்திற்கும் தெளிவுக்கும்,

"மறைமுதற் கலைகளெல்லாம் மணிமிடற் றவனே யெங்கும்
நிறைபர மென்றும் பூதி சாதன நெறிவீ டென்றும்
அறைகுவ தறிந்துந் தேறார் அறிவெனக் கலங்கி அந்த
முறையின் வீடுணர்ந்தோர் போலத் தெளிந்தது மூரிவெள்ளம்"

எனவும், அகழியில் வீழ்ந்தோர் கரையேற மாட்டார் என்பதற்கு,

"தெண்ணிலாமதி மிலைந்தவர்க் கொப்பெனச் சிலரை
எண்ணினா ரிருள்நரக நீத்தேறினும் ஏறார்"

எனவும் உவமை கூறுதல் முதலியன, 'இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி இரண்டாட்டா தொழிந்து ஈசன் திறமேபேணும்' இவரது உறுதிப்பாட்டைப் புலப்படுத்துவனவாகும். மற்றும் இந்நூலிலே,

"மருட்சிசெய் காமநோயால் மதிகெடு மாறுபோல"

"கோபமூள மெய்த்தவஞ் சிதையு மாபோல்"

"உத்தமகுணங்க ளெல்லாம் உலோபத்தா லழியுமாபோல்"

"செருக்குற வழியுங் கற்ற கல்விபோல்"

என்றிங்ஙனம் உவமையாகவும்,

"தையலார் மயலிற்பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ"

"அறிவிலாத, அற்பரானவர்க்குச்செல்வமல்லதுபகைவேறுண்டோ"

என்றிங்ஙனம் வேற்றுப் பொருள் வைப்பாகவும் மக்கள் அறிந்து கடைப்பிடிக்க வேண்டிய எத்தனையோ பல நீதிகள் உந்துள்ளன. மற்றும் நவமணி யிலக்கணம், புரவியிலக்கணம், இசை, கூத்து முதலிய கலைகளும், பல சமய நுண் பொருள்களும் இதன்கண் அறியக் கிடக்கின்றன. எல்லாவற்றினுங் காட்டில் இதில் விஞ்சித் தோன்றுவன இறைவனுடைய அருட் பெருக்கைப் புலப்படுத்தி பத்தி நலங்கனியச் செய்யும் செய்யுட்களே. அவற்றிற் சிலவற்றை எடுத்துக் காட்டி இவ்வுரையினை முடிப்போம்.

"வேதமுதற் கலைகாட்சி முதலளவை விரிஞ்சன்
முதல் விண்ணோர் செய்யும்
சோதனையு ளகப்படாச் சோதியுனைச்
சோதிக்கத் துணிந்தோ னந்தோ

பேதமையே னிடத்தென்ன குணங்கண்டேன்
பிணிதீர்த் தென்பெற்று யாசை
கோதமிலாய் குற்றமே குணமாகக்
கொள்வதுநின்குணமோ வையா"

என்பது வருணனும்,

"நின்னால் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும்
பன்னா ளருச்சித்தும் பாதந் தலைசுமந்தும்
உன்னுமம் வாசித்தும் உன்னை யறியே னென்று
சொன்னா லடியனேன் சோதனைத்தோ நின்னியல்பே"

என்பது அபிடேக மாறனும் வழுத்திய பாடல்கள்.

"எழுதரிய மறைச்சிலம்பு கிடந்து
புறத்தலம்ப வன்பரிதய மென்னும்
செழுமலரோடையின் மலர்ந்து சிவானந்தத்
தேன்றதும்பு தெய்வக் கஞ்சத்
தொழுதகுசிற் றடிப்பெரிய விரல்சுவைத்து
மைக்கணீர் துளும்ப வாய்விட்
டழுதணையா டையிற்கிடந்தான் அனைத்துயிரு
மீன்று காத்தழிக்கு மப்பன்"

என்பது விருத்தனாய்க் குமாரனாய இறைவன் பின் பாலனாயது.

"கடிய கானகம் புகுதவோ கட்டிய விறகை
முடியி லேற்றவோ முண்டகத் தாள்கணொந் திடவந்
தடியனேன் பொருட் டடாதசொற் பகரவோ வஞ்சக்
கொடியனேன் குறை யிரந்தவா விளைந்ததே குற்றம்"

"நெடிய னேமுதல் வானவர் நெஞ்சமும் சுருதி
முடிய னேகமுங் கடந்தநின் முண்டகப் பாதம்
செடியனேன் பொருட்டாகஇச் சேணிலந் தோய்ந்த
அடிய னேற்கெளி தாயதோ வையநின் பெருமை"

என்பன பாணபத்திரர் பரவுதல். மற்றும் வாதவூரடிகளுக்கு உப தேசித்த படலத்திலுள்ள செய்யுட்கள் அனைத்தும் நெஞ்சை யுருக் கும் நீர்மையன.

"பித்தித வெனப்பிறர் நகைக்கவரு காலஞ்
சத்திபதி யத்தமது சத்தறிவு தன்னைப்

பொத்திய மலத்தினும் வெளீஇச்சுமை பொறுத்தோன்
ஒத்திழி பிணிப்புறு மொருத்தனையு மொத்தார் "

"நெருப்பிவிடு வெண்ணெயென நெஞ்சுருக வெள்ளை
உருக்குமித னாலெனை யொளித்தமல வாற்றல்
கருக்குமவ னாகியெனை யாள்கருணை வெள்ளம்
இருக்குமிட னேயிதென வெண்ணிநகர் புக்கார் "

என்பன, அடிகள் திருப்பெருந்துறையை அடைதல். ஆரா வன்புடன் செல்லுஞ் செலவைப் பாட்டின் நடையாலும் ஆசிரியர் புலப்படுத்தி யிருக்குந் திறன் அறிந்து பாராட்டி மகிழ்தற்குரியது.

[குறிப்பு:—இக்கட்டுரை காலஞ் சென்ற நாட்டாரவர்கள் மதுரையில் நடந்த சமாஜ விழாவில் நிகழ்த்தக் கருதிய சொற்பொழிவின் சுருக்கம். உடல்நல மின்மையால் இச்சொற்பொழிவை அப்பெரியார் நிகழ்த்த இயலாமற் போயிற்று—பத்திராசிரியர்].

# சமாஜ அறிக்கைகள்

**[காரியதரிசி]**

1. நமது சமாஜம், திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த பாபநாசத்தில், கோடை விடுமுறையில், ஒரு சித்தாந்த வகுப்பை, மிகச் செம்மையாக, 14-5-44 முதல் 25-5-44 வரையில் நடத்திற்று. இதைப்பற்றிய முழு விவரங்கள் கீழ்வருவனவாகும்.

சமாஜக் கோடை வகுப்பு மிகச் சிறப்பாக நடந்தது. பாபநாசம் கோயிலில் ஆலய வழிபாடு நடந்த பின் திருவிக்ரமசிங்கபுரத்தில் மாதவச் சிவஞான முனிவர் ஆலயத்தில் 14ஆ வகுப்புத் தொடங்கியது. உயர்திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் தொடங்கிவைத்தார். திருவாவடுதுறை திரு.சங்கரலிங்கத்தம்பிரான் அவர்கள் ஆசி கூறினார்கள். அது சமயம் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், அம்பை வழக்கறிஞர் K. A. சிவஞானம் பிள்ளை, ஆசிரியர் சங்கரனார், மு. ரா. கந்தசாமிக் கவிராயர் முதலியோர் பேச, வந்தன வழிபாட்டுடன் கூட்டம் முடிந்தது.

தொடர்ந்து 12 நாள் வகுப்பு நடந்தது. காலையில் துயிலெழுந்து, இறைவனை நினைந்து, நீராடி, கோயில் வழிபாடு செய்து, தனியே படித்துவிட்டுக் காலை 10 மணிக்கு வகுப்புத் தொடங்கி

யது. மாலை வகுப்பு 3-30 முதல் 5-45 வரை நடந்தது. மாலை 7-30 ஆசிரியர்களும் மாணவர்களும் கோயில் வழிபாடு செய்து, வலம் வந்து சிவஞானபோத சூத்திரம் பாராயணம் செய்து வந்தார்கள். இவ்வகுப்புக்கு அங்கமாகக் கோயிலில் கூட்டம் நடந்தது.

திரு. சிவகுருநாத பிள்ளை அவர்கள், திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், திரு. க. வஜ்ரவேல் முதலியார், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், கா. இராமநாதன் செட்டியார் வகுப்பு எடுத்துக்கொண்டனர். காலையில் 45 நிமிஷம் உள்ள நான்கு பிரிவும் (Period) மாலையில் மூன்று பிரிவும் நடந்தன.

திரு. வஜ்ரவேல் முதலியார் அவர்கள் சிவஞான போதச் சிற்றுரையில் முதல் இரண்டு சூத்திரத்தைத் தொடர்ந்து விளக்கியும், அது சம்பந்தமாக பாஷ்யத்தில் காணவேண்டிய முக்கிய பகுதிகளைக் காட்டியும், ஏனைய சூத்திரங்களைத் தொகுத்தும் கூறினார்கள். திரு. சிவகுருநாத பிள்ளை அவர்கள் சிற்றுரையில் சில பகுதிகளை விளக்கினார்கள். திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் கோயில், சிற்பம் முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் சரியை முதலியவற்றைப்பற்றியும், கோயில் வழிபாட்டைப்பற்றியும் பேசினார்கள். சைவசித்தாந்தத்தின் சில அடிப்படை உண்மைகளைப்பற்றிக் காரியதரிசி கூறினார்.

இவ்வகுப்புக்கு மாணவர்களாக வந்திருந்தவர்கள் 72, ஆண்கள் 55 பெண்கள் 17.

இரவில் கோயிலில் நடந்த கூட்டங்களில், மங்கையர்க்கரசியும் கூன்பாண்டியனும், திலகவதியார், தொண்டர்க்கு நாயகன், அறத்துப்பால், திருஞானசம்பந்தர், பன்னாட்டுப் பழமொழிகள், நேசநாயனார், பண்டைத் தமிழர் நாகரிகம், கண்ணப்பர் அன்பின் திறம், சிவஞான போதம் - எட்டாம் சூத்திரம், அப்பூதி அடிகள், பண்டமாற்று, மெய்த்தொண்டர், போரும் சிவஞான முனிவரும், தந்தையும் மகனும், காரைக்கால் அம்மையார் என்னும் பொருள்களைப்பற்றி முறையே திருவாளர்கள் சுப்பிரமணிய பிள்ளை, சிவகாமி அம்மாள், சூரங்குடி திருநாவுக்கரசு, T. S. கந்தசாமி முதலியார், தூத்துக்குடி ஈஸ்வரமூர்த்தி, T. S. கந்தசாமி முதலியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார், தூத்துக்குடி கோமதிநாயகம், திருநெல்வேலி நல்லகண்ணு பிள்ளை, காஞ்சி பொன் சண்முகனார், P. R. சுவாமிநாதனார், அம்பை சங்கரனார், அழகப்பா - அண்ணா

மலை, பழனி ஆச்சாரி, நா. இ. மகாலிங்கம், பார்வதி அம்மாள் ஆகிய அன்பர்கள் பேசினார்கள். தினமும் ஒருவர் தலைமை வகித்தார். அப்பணி செய்தவர்கள் திருவாளர்கள் சிவகுருநாத பிள்ளை, C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார், காஞ்சி வஜ்ரவேலு முதலியார், மாயவரம் கல்யாணம் பிள்ளை, K. A. சிவஞானம் பிள்ளை, D. ஆறுமுகம் பிள்ளை, சிவகாமி அம்மையார் ஆவர்.

திருவாவடுதுறை ஆதீனத்து மஹா சந்நிதானம் இவ்வகுப்பிற்கு நன்கொடையாக ரூபாய் 300 முந்நூறு உதவியும் அவர்கள் பிரதிநிதியாக அருட்திரு சங்கரலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்களையும், கண்காணிப்பாளர் திரு. இராமலிங்க பிள்ளை அவர்களையும் அனுப்பியிருந்தார்கள். பணஉதவி செய்தவர்களின் விபரமும் வரவு செலவு கணக்கும் அடுத்த இதழில் வரும்.

பாபநாசம் கோயில் எக்விகூடிவ் ஆபீசர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். ஆனந்த விலாசத்தில் வகுப்பு நடந்தது.

குற்றாலம், பாபநாசம், பம்பை, மானூர், சங்கரன் கோயில், கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி, அம்பா சமுத்திரம் முதலிய இடங்களிலிருந்து கோயில் தர்மகர்த்தர்கள் ஒவ்வொருவரும், பட்டர் ஒருவரையும், ஓதுவார்மூர்த்தி ஒருவரையும் வகுப்புக்கு அனுப்பிவைத்தார்கள்.

25-5-44ல் அதாவது கடைசி தினத்தன்று வகுப்புக்கு ஒழுங்காக வந்த 36 பேர்களுக்குத் திரு. C.M. இராமச்சந்திரஞ் செட்டியார் உறுதிப் பத்திரம் வழங்கினார். அன்று கோயில் வழிபாட்டுடன் வகுப்பு சிறப்பாக முடிந்தது.

2. நமது சமாஜத்தின் ஜூன் மாதக் கூட்டம் மரக்காணத்தில் திரு. அடிசைகிழார் சிதம்பரனார் அவர்கள் தலைமையில் 1-6-44 மாலை 6 மணி முதல் பத்து மணி வரையில் நடந்தது. திருவாளர்கள் பழனிசாமி சிவாசாரியர், பு. ர. சுவாமிநாதனார் அவர்கள் முறையே திருத்தொண்டருடைய அன்பு நிலையும் சேக்கிழாரும், இளங்கோவும் செகப்பிரியரும் என்பனபற்றிப் பேசினார்கள். அடுத்த நாட்காலையிலும் மாலையிலும் மரக்காணம் தமிழ் நன்னெறிக் கழகங்களின் ஆண்டு விழா நடந்தது. திரு. மயிலைகிழார் இளமுருகனார் இரண்டறக் கலத்தல் என்பதுபற்றியும், திரு. இளவழகனாரவர்கள் ஞான வாழ்க்கையும் சைவசித்தாந்த சாத்திரங்

களும் என்பதுபற்றியும் பேசினார்கள். வேறு சிலர் சொற்பொழிவுகளும் நடந்தன. மரக்காணம் ஜமீன்தாரர்களான திரு. ம. எ. சிங்காரவேல் முதலியாரவர்களும், திரு. ம. எ. கணபதி முதலியாரவர்களும் நன்கு உபசரித்தனர். திரு. சிங்காரவேல் முதலியார் செல்வப் புதல்வர் சிவஞான சம்பந்தனார் இனிய பலதமிழ்ப் பாடல்களைப் பாடினார்.

3. திருச்சி ஜில்லா இலங்தைக் கூடத்தில் சென்னை இராமகிருஷ்ண மடம் நமது சமாஜம் ஆகிய இரண்டின் கண்காணிப்பில் மே 5, 6, 7 தேதிகளில் கிராமத்தொண்டு நன்கு நடைபெற்றது.

# திருக்காரிகரை

*[ச. சச்சிதாநந்தம் பிள்ளை]*

பண் : பழம்பஞ்சுரம்

**வி**த்தா ரக்கான்[1] வியன்கிரியும்[2] விளங்குங் காரிக் கரையுறைவாய்!, அத்தா ! பலவாண் டாயடியேம் அறியா திருந்தோம் கினை அந்தோ!, கொத்தார் குழலாள் உமைபங்கா ! கோவே ! சுயம்பாம் கோலத்தாய் !, பித்தா ! பித்தர் பெருமானே ! பிழைதீர்த் தெமையாட் கொள்வாயே. 1

கொள்வார் கொள்ளும் பொருளெல்லாம் கொடுத்தே வளர்க்கும் கொள்கையினாய்!, வள்வார் முரசின் ஒலியதிர்க்கும் வளகின்றியலும் வாழ்க்கையினாய் !, கள்வார்[3] கொன்றை காபாலம் கனிந்தேல் காரிக் கரையுடையாய் !, விள்ளா அன்பிங் குளததனை விள்ளச் செய்தே வீடருளே. 2

அருளா ராட்சி அநபாயன் அவன்முன் னோர்கள் அரும்பணிகொண் டுருவாங் கோயில் கொண்டானே ! உருவங் குலைதல் ஒல்லுவதோ ?[4]
திருவார் காரிக் கரைப்பேரும் திரிந்தே ராம கிரியான(து),
இருமா குறையு முடன்தீர எந்தாய் ! இன்னே பணியாயே. 3

---

[1]விஸ்தாரம் கான் - பரந்த காடு. [2]உயர்ந்த மலை. [3]தேனைச் சொரிகின்ற. [4]பொருந்துவதோ - பொறுக்கத் தக்கதோ.

பணிவார் பாவம் பாற்றவல்லாய்! பாம்பும் மதிகொள் பகை தீர்ப்பாய்!, திணிவார் தெலுங்கும் தீந்தமிழும் சேரும் காரிக் கரை மறையோய்!, அணியார் நந்தி யதன்வாய்க்கீழ் அழகூற் றென்றும் அருவுதல்போல், மணியார் சிவனே! மானசவம் மன்னிப் பெருக வரநல்கே. 4

நல்லார் பரவும் சம்பந்தன் நாவுக் கரையன் நத்திவரும்
கல்லார் காரிக் கரையுடையாய்! கவிஞ ரிலிங்க மலையுடையாய்!
அல்லார் கண்டத் தருளுடையாய்! அவனிப் பெரும்போ ரொழிந்தன்
வல்லார் மாட்டார் யாவருமே மகிழ்ந்து வாழ வேண்டுவனே. [பின்

# விரிமனங் குவியும் வேளை

[வித்துவான் - முத்து. சு. மாணிக்கவாசகனார்]

தாயுமானவர் "விரிந்த மனமொடுங்கும் வேளையிஞ ஞகப் பரந்த அருள்வாழி பதியே பராபரமே" என்றும், "எத்தனை விதங்கள் தாம் கற்பினும் கேட்கினும் என் இதயமும் ஒடுங்கவில்லை" என்றும், "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்றும், "பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவது உனக்கு அருமையோ" என்றும், "ஆடிய கறங்குபோல் ஓடி உழல் சிந்தையை அடக்கி ஒரு கணமேனும் யான் காணிலேன்" என்றும் பிறவாறும் பலபடியாகப் பாடியருளினர். 'அவர்க்கு மனம் விரிந்து குவியாதிருந்தது. அதனல் அது குவியும் வேளையை வேண்டினர்' என்று முடிவு கட்டித் தம் மனத்தைப் பற்றிக் கவலைகொள்ளாதார் பலர். இவர்கள் மனம், கிருமியைப்போல ஒன்றுவிட்டு ஒன்று பற்றிப் பாழாவது. இப்பாழ் மனம் கொலை முதலிய ஐம்பெரும் பாவங்கட்கும் ஆட்சிக்களமாகும். மனம் விரிந்துங் குவிந்தும் ஒருநிலைப் படாதிருக்கும்வரை இன்ப துன்பம் மாறிமாறி வந்துகொண்டிருக்கும். விரியும்போது துன்பமும் குவியும்போது இன்பமும் உண்டாதல் அநுபவம். இதுவே இன்பதுன்பக் கலப்புடைய வாழ்விற்குக் காரணம். இவ்வின்ப துன்ப நிலையினின்றும் நீங்கி இன்பநிலை ஒன்றே நாடி அது பெறுங்கருத்து உயிர்க்கு எளிதில் வாராது.

இன்பதுன்பக் கலப்புடைய நிலையிலும் துன்பமேயுள்ள நிலையிலும் அநுபவமுற்ற உயிர்க்கு, இன்பமேயுள்ள தனிப்பெரு நிலையில் வேட்கையுண்டாகும். அப்போதுதான் அவ்வுயிர்கள் தாயுமானவர் அருளியபடி, பின் விரியாத வகையில் மனம் குவியும் வேளையை வேண்டும். இன்ப நிலையைத் தெரிவிக்கும் 'கூடுதலுடன் பிரிதலற்று' என்று தொடங்கும் தாயுமானவர் திருப்பாடலை இங்குக் கருதவேண்டும். அப்பேரின்ப நிலையைப் பெறுதற்கே அறிவு, மறை, சமயம் முதலிய சாதனங்கள் உயிர்க்கு வாய்த்துள்ளன. இச்சாதனங்களிருந்தும் இவற்றைப் பொருளாகக் கொள்ளாமல் உயிர்கள் இன்பதுன்ப நிலையில் ஏன் உழலுகின்றன? வினை எவரைவிட்டது?

"வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்த" வாய்மை யன்றோ?

செய்வினை நல்வினையாயின் அது உயிரைத் துன்ப நிலைக்கும் இன்பதுன்ப நிலைக்குங்கொண்டு செலுத்தாமல் இன்ப நிலைக்கே செலுத்தும். 'வினைவிதைத்தவன் வினையறுப்பான்' என்பது இருவினைக்கும் பொது. நல்வினைப் பிரிவுகளுள் ஒன்றன் சிறப்பைத் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய ஒரு திருப்பாட்டு நன்கு விளக்குகின்றது. அது,

"அவ்வினைக் கிவ்வினையாம் என்றுசொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது உந்தமக் கூனமன்றே?
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாம்அடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீல கண்டம்"

என்பது முற்பிறப்பில் செய்த வினையே இப்பிறப்பில் அநுபவிக்கப் படுகின்றது என்பதை அறிபவர்களே! இவ்வினையின் நீங்கி உய்தி பெற விரும்பாதது குற்றமன்றோ? இவ்வினை எவ்வாறு நீங்கும்? சிவநல்வினையாகிய சிவபூசை முதலியவற்றைச் செய்தால்தான் நீங்கும். இவ்வுண்மையைத் திருநீலகண்டத்தின்மேல் ஆணை வைத்துக்கூறியருளும் பான்மையை அறிந்து மனங்குவியும் வழியை நாடுதல் ஒவ்வோருயிர்க்கும் உற்ற கடமையாகும்.

அத்தகைய உய்தியைப்பெற முதன்முதலாகப் பற்றவேண்டியது, பொய்யாமை. அதைப் பெற்றால் தவவிரதம், சீலம், இரக்கம், ஈகை, மமதை நீக்கம், அகந்தை யின்மை என்பவை முறையாகத் தாமே வரும். அதன்பின் மனம் குவிந்தேவிடும் மோனநிலை உண்டாகும். பின் விரிவை அடையாது. இம்மனக் குவிவு உண்டாகும் வகையில் கற்றலும் கேட்டலும் உடையவரே பெரியோர். 'கற்றல் கேட்டலுடையார் பெரியார்' என்று இவரையே குறித்தல் காண்க. அகந்தை தொலைய மமதை அகலும். மமதை அகல ஈகை எய்தும். ஈகைஎய்த இரக்கம் இயல்பாகக் காரணமாய் முன்பேதோன்றிவிடும். இரக்கந் தோன்றச் சீலம் சிறந்து விளங்கும். சீலஞ்சிறக்கத் தவ விரதம் தவறாமல் வேண்டும். அவ்விரதம் பொய்யாமையை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாறு ஒழுங்காக இல்லாதது பிறர் கேட்கப் போதிக்கவே கற்றதும் கேட்டதுமான கல்வியறிவாய் வெறும் போலியாய்ப் போம். இதனை "எத்தனை விதங்கள் தாம்" எனத் தொடங்கும் பாட்டால் தாயுமானர் விளக்கியருளினர். "அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்குந் தொழும்பர், உளக் கோயிற்கு ஏற்றும் விளக்கும்", "யான் எனது என்றற்ற இடமே திருவடி", "மோன பரானந்தம் முடி", 'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்' என்பவற்றை இங்கு எண்ணுக.

"இடம்பெறு வீடுமின் னர்சேய் சகமும் இருநிதியும்
உடம்பைவிட் டாருயிர் போம்போது கூடி யுடன்வருமோ
மடம்பெறு மாயை மனமே! இனிஇங்கு வாமௌனி
திடம்பெற வைத்த மௌனம் சகாயம் தெரிந்துகொள்ளே"

"அற்ப மனமே அகிலவாழ் வித்தனையுஞ் [யொன்
சொற்பனங்கண் டாய்உண்மை சொன்னேன்நான்—கற்பனை
றில்லா இடத்தே எனைச்சும்மா வைத்திருக்கக்
கல்லாய்நீ தான்ஓர் கவி" —(தாயுமானர் பாடல்கள்)

# ஸ்ரீ சேக்கிழார் பெருமான் பெருமை

## [சமரஸம் சுவைப்போன்]

(மலர் - 17 ; இதழ் - 5 ; 80ம் பக்கத் தொடர்ச்சி)

7. பரத்வ நிலையைக் கவனித்தால் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் "யாவர்க்கும் கீழாம் அடியேன்" என்றார். நம்மாழ்வார் "தான் முடிவு காணாதே" என்றார். உயர்வு அற உயர்நலம் உடையவனுயவன் அவன் என்று ஜலஸ்வரூபமாக வர்ணிக்கப்படுகிற திருமால்தான் கீழ்மை என்று மேலிருந்து கீழே போக அக்நிஸ்வரூபமாகிய சிவபெருமான் தான் கீழ்மை என்று ஜலஸ்வரூபத்தைக் கீழே போகவிடாமல் ஆவியாக்கித் தன் தலைமேல் கங்கையாக வைத்துக் கொண்டிருக்கிறார். இப்படி ஒருவருக்கொருவர் "பரஸ்பர நீசபாவை" என்று நான் தாழ்மை நான் தாழ்மை என்று சம்பந்தரும் அப்பரும் கூடினாற்போல் இருக்கிற தன்மையைக் கவனித்தால் அவர்கள் அடியவர்களாகிய நாம் என் பெருமான் உயர்வு என் பெருமான் உயர்வு என்று வீண் வாதம் செய்து "எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லை" என்ற கருத்தின்படி அபசாரப்பட்டு ஆழ்ந்த அஞ்ஞானத்தில் மடிந்து வீழ்கிறோம்.

ஏன் இப்படி சைவம் வைணவம் என்ற இரண்டு நூல்கள் ஏற்பட வேண்டுமென்பதற்கு ஆண் பெண் இருவகுப்பு இருப்பதனாலும் இரண்டுங் கலந்தால்தான் அன்பு நெகிழ்ச்சி ஏற்படுமென்றும் அதுதான் மண்ணும் மணமும் என்றும் அந்த மணங்கண்டு வாழ்ந்தோமென்றும் சொல்லப்படுகிறது. அப்பர் பெருமான் "ஆலின் இலைமேல் பாலனுமாய அவற்கோர் பரமாய மூர்த்தியவனும் நமக்கோர் சரணே" என்று திருமால் நினைக்கிறமூர்த்தி தன் மூர்த்தி என்றும், திருமங்கையாழ்வார் சீலமாதவத்தோர் சிந்தையாளி என் சிந்தையானே என்று சிவபெருமான் சிந்திக்கிறமூர்த்தி தன் மூர்த்தி என்றார். நம்மாழ்வார் "சிவனொடு பிரமன் வரை திருமடந்தைசேர் திருவாகம் எம்மாவியீடும்" என்றார். எலக்டிரிக் விளக்குக்கு அக்நியிலிருந்து ஒரு காண்டு ஜலத்திலிருந்து ஒரு காண்டு இரண்டும் சேர்ந்தால் வெளிச்

சத்திற்கு உயிர். ஆனால் இரண்டால் பிரகாசமில்லை, பிரமனாகிய உடம்பு பல்பு சேர்ந்தால் பிரகாசம் உண்டாகிறது. அதுபோல் அருளும் அதனை உடையவனும் வேண்டும். அருளை உடையவன் தாள் அணைவிக்கும் முடித்தே என்று சொல்லுகிறபடி வேற்றுமை நீக்கி ஒற்றுமைப்படவேண்டும்.

"வில்லதோர் வண்ணம் சொன்னால் அது உனக்கு ஆம் வண்ணமே" என்றதுபோல் ஸ்ரீ சேக்கிழார் புராணத்தின் பெருமையை அடியேனாகிய சிறியன் அறிந்தமட்டில் தெரிந்து சைவமில்லாமல் வைணவமில்லை வைணவமில்லாமல் சைவமுமில்லை என்றும், பெரிய புராணம் எல்லா மதத்தாருக்கும் சத்தஸ்யமென்றும், "சத்தியத்தைச் சொல் தர்மத்தைச்செய்" என்றுதான் சொல்லுகிறதென்றும், நாடும் நகரமும் நன்குடன் காணும்படிக்கும் நலனிடை ஊர்தி பண்ணும்படிக்கும் தீமனங்கெடுத்து மருவித் தொழும் மனமே பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டாக மெய்அடியார்களாக விளங்கி, பரோபகாரத் தன்மையில் வாழ்ந்துவரும்படிக்கும் உபதேசிக்கப்படுகிற கிரந்தமாக அறிந்துகொண்ட விபரத்தைச் சுருக்கமாய் அடியேன் எழுதலானேன்.

Editor : M. Balasubrahmanya Mudaliar, B. A., B. L.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah by T. V. Volaganathan (Publisher) for the Saiva Siddhanta Maha Samajam, at 51, Thengur Chelvavinayagar Koil Street, Mylapore, Madras.